Academic Research News
*Peer-Reviewed Journal*



**Volume 4, Issue 1 June 2026** **E-ISSN: 2584-167X**

# The Virtues of Jesus in Tamil Christian Dramas

**Dr. J. Mary,** Assistant Professor in Tamil, Jayaraj Annapackiam College for Women (Autonomous), Periyakulam, Theni (Dt), Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0003-4819-2179**

## Abstract

*The artistic spirit and literary knowledge of the ancient Tamils, who lived in harmony with nature, are immeasurable. It is the credit of Tamils that they have given to the world what they have learnt from nature in the form of art and literature. The literature is a good example of this. Tamil is the language of dance, music, art and drama. Drama is one of the most loved art forms of Tamil people. It was a people's university. Moreover, Jesus commanded His disciples to go into the entire world and preach the good news to all creation. The disciples took orders and came to Tamil Nadu for the work of concealment. In this case, there were various obstacles between the covert and the personnel and the people. One of them is language. So it was great to hear the good news. In such a context, the Tiruttondars took up theatre, the favourite art form of the Tamil people, as a tool to propagate their religion. They presented the views of Christianity in the form of dramas. Thus, the art of Tamil Christian drama literature was revived. Tamil Christian dramas not only interpret the message of Christianity. It is not just for Christians. The purpose of this review is to make the community aware that they were created for the benefit of all people in the community, to highlight Jesus' values and to guide people.*

**Keywords:** Concealment, Harmony, Tiruttondars, Christianity, Values, Propagate, Dramas.

## References

[1] Aanandhi. J.P. "Vedhaagamam Kaattum Vaazhviyal Nerimuraigal." *Tamizhmozhi Matrum Ilakkiya Pannaatu Aayvithazh*, Volume 2, Issue 2, May-2019, E-ISSN: 2581-7140.
[2] Ilampooranar Urai. *Tholkaappiyam*. Va. Siththaandha Noorpathippu Kazhagam, Chennai, Marupathippu, 1982.
[3] Jansi Rani, K., & K. Amala Kaarthika. "Sanga Kaala Thamizharin Vaazhviya Vizhumiyak Koorugal." *Tamizhmozhi Matrum Ilakkiya Pannaatu Aayvithazh*, Thoguthi 7, Ithazh 1, 2024, ISSN: 2581-7140.
[4] James. *Pazhaiyadhu Pudhidhaaga Valarchchikkaaga Vaazhviya Nerigal*. Vaigarai Pathippagam, Dindukkal, Mutharpadhippu, April 2019.
[5] *Thiruviviliyam*. Pothumozhipeyarppu. Tamilnaadu Vivilia Maraikkalvi Thiruvazhipaattu Nadu Nilaiyam, Thindivanam, 1995.
[6] Parimelazhagar. *Thirukkural Parimelazhagar Urai*. Manivaasagar Pathippagam, Chennai, Irandaam Pathippu, 2017.
[7] Boothaloor Muthu. *Mezhuguvaththigal*. Annai Theresa Pathippagam, Saaram, Puduchcheri, Mutharpadhippu, December 2001.
[8] Manivalan, C. (P.A.). *Oodhaarippillai Vilaasam*. Kiristhava Aayvu Maiyam, Thooya Valanaar Kalloori (Thannatchi), Thiruchchiraappalli, Mutharpadhippu, December 1993.
[9] Manivalan, C. (P.A.). *Sree Bakaartha Vilaasam*. Kiristhava Aayvu Maiyam, Thooya Valanaar Kalloori (Thannatchi), Thiruchchiraappalli, Mutharpadhippu, December 2012.

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

[10] Mariya Anthony, J. *Ulaviyal Aanmeegam*. Namvaazhvu Veliyidu, Mayilaappoor, Chennai, Mutharpadhippu, April 2009.
[11] Mariya Mikael, A. *Olinirai Punithai Clara Varalaatru Naadagam*. Kavin Achchagam, Madurai.
[12] Joseph Beski, A. (P.A.). *Nalloor Kurusu Anthonimuthu Iyattriya Punitha Kanugondhammaal Keerthanai Naadagam*. Kiristhava Aayvu Maiyam, Thooya Valanaar Kalloori (Thannatchi), Thiruchchiraappalli, Mutharpadhippu, December 2012.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

# தமிழக் கிறித்தவ நாடகங்களில் நாடகங்களில் இயேசுவின் விழுமியங்கள்

**முனைவர் சே.மேரி**, உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம், தேனி மாவட்டம் – 625601, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0003-4819-2179

**ஆய்வுச் சுருக்கம்**

*இயற்கையுடன் பின்னிப்பிணைந்து வாழ்ந்த பண்டைய தமிழரின் கலை உணர்வும் இலக்கியப் புலமையும் அளவிட்டுக் காண்பதற்கு அரிய ஆற்றலோடு அமைந்துள்ளன. இயற்கையிடமிருந்து கற்றவற்றைக் கலையாகவும் இலக்கியமாகவும் உலகிற்கு வழங்கிய பெருமை தமிழருக்குரியதாகும். இதற்குச் சங்க இலக்கியங்கள் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. தமிழர் நற்றமிழை, இயல், இசை, நாடகம் என முத்தமிழாக வகைப்படுத்தினர். இவற்றுள் தமிழர் நாடி விரும்பும் இன்பக்கலையாக நாடகம் திகழ்கிறது. இக்கலை பாமர மக்களின் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது. இயேசுபிரான் தம் சீடர்களை நோக்கி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைக் கூறுங்கள் என்று கட்டளையிட்டார். சீடர்கள் கட்டளைகளை ஏற்று மறைபரப்பும் பணிக்காகத்; தமிழகத்திற்கு வருகை தந்தனர். இந்நிலையில், மறைபரப்பும் பணியாளர்களுக்கும் மக்களுக்குமிடையே பல்வேறு தடைகள் இருந்தன. அவற்றுள் ஒன்று மொழித்தடையாகும். இதனால் நற்செய்தி அறிவிப்பது பெரும் தையாக இருந்தது. அத்தகைய சூழலில் திருத்தொண்டர்கள் தமிழ் மக்களின் விருப்பக் கலையான நாடகக்கலையைத் தம் சமயத்தைப் பரப்புவதற்கான கருவியாகக் கொண்டனர். அவர்கள் கிறித்தவ சமயக் கருத்துகளை நாடகங்களாக்கி மக்களைக் காணச்செய்தனர். இவ்வாறு தமிழ்க் கிறித்தவ நாடக இலக்கியக் கலை புத்தெழுச்சி பெற்றது. தமிழ்க் கிறித்தவ நாடகங்கள் கிறித்தவ சமயம் சார்ந்த செய்திகளை மட்டும் விளக்கவில்லை. கிறித்தவர்களுக்காக மட்டும் படைக்கப்படவில்லை. அவை சமுதாயத்தில் உள்ள எல்லா மக்களின் நலனுக்காகவும் இயேசுவின் விழுமியங்களை எடுத்துரைத்து மக்களை நல்வழிப் படுத்தும் பொருட்டு படைக்கப்பட்டன என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச்சொற்கள்**: திருத்தொண்டர்கள், மொழித்தடை, விழுமியங்கள், புத்தெழுச்சி, கிறித்தவ நாடகங்கள்.

**முன்னுரை**

இயற்கையுடன் பின்னிப்பிணைந்து வாழ்ந்த பண்டைய தமிழரின் கலை உணர்வும் இலக்கியப் புலமையும் அளவிட்டுக் காண்பதற்கு அரிய ஆற்றலோடு அமைந்துள்ளன. இயற்கையிடமிருந்து கற்றவற்றைக் கலையாகவும் இலக்கியமாகவும் உலகிற்கு வழங்கிய பெருமை தமிழருக்குரியதாகும். இதற்குச் சங்க இலக்கியங்கள் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழர் நற்றமிழை,

**இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழென**
**வகைப்படச் சாற்றினார் மதியுணர்ந்தோரே (பிங்கல நிகண்டு, நூற்பா 231, 6:8)**

என்பதிலிருந்து இயல், இசை, நாடகம் என முத்தமிழாகத் தமிழர் வகைப்படுத்தினர். இவற்றுள் தமிழர் நாடி விரும்பும் இன்பக்கலையாக நாடகம் திகழ்கிறது. இக்கலை பாமர மக்களின் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது. நாடகங்கள் உலகம் முழுவதும் தெய்வத் தொடர்புடைய இலக்கியமாகக் கருதப்படுகிறது. இவ்விலக்கியங்கள் பொதுவாக மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவும், அறநெறிக் கருத்துகளைப் போதிப்பதற்காகவும்

உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் விவிலிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றன.

திருவிவிலியம் என்பது கிறித்தவர்களின் புனித நூலாகும். இந்நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் இரு பகுதிகளைக் கொண்டது. புதிய ஏற்பாட்டில் இயேசு பிறப்பு முதல் இறப்பு வரையிலான செய்திகளையும் பழைய ஏற்பாட்டில் இயேசுவின் பிறப்பு பற்றி முன்னறிவிக்கப்பட்ட செய்திகளையும் கூறுகிறது. இவ்விவிலியத்தில் அமைந்துள்ள இயேசுவின் விழுமியச் சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துரைத்துநல்வழிப்படுத்தும் பொருட்டு

1. **ஊதாரிப்பிள்ளை விலாசம் - மரியதாஸ்**
2. **ஒளிநிறை புனிதை கிளாரா வரலாற்று நாடகம் - அருட்தந்தை ஏ. மரிய மிக்கேல்**
3. **குருதியில் பூத்த மலர் - லீமா ரோஸ்**
4. **புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகம் - நல்லூர் குருசு அந்தோணிமுத்து**
5. **ஸ்ரீ பகார்த்தர் விலாசம் - சவரிராயப் பிள்ளை**

போன்ற நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் வழி இயேசுவின் விழுமியங்கள் சமயச் சார்பற்றதாய் எல்லா மக்களும் பின்பற்றி பயன் பெறும் வகையில் கையாளப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**கிறித்தவ நாடகங்கள்**

இயேசுபிரான் தம் சீடர்களை நோக்கி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைக் கூறுங்கள் என்று கட்டளையிட்டார். இயேசுவின் கட்டளையை ஏற்றுக்கொண்டு இந்தியாவிற்கு வந்தவர் புனித தோமையார். கி.பி. முதலாம் நூற்றாண்டில் இவர் தமிழகத்திற்கு வந்திருந்தாலும், கிறித்தவம் அக்காலத்தில் பரவியதாகத் தெரியவில்லை. போர்த்துக்கீசியர்கள் வியாபாரத்திற்காக வருகை தரத் தொடங்கினர். இவர்களோடு மறைபரப்பும் பணிக்காகத் திருத்தொண்டர்களும் வருகை தந்தனர்.

இக்காலக்கட்டத்தில் திருமறைப்பணியாளர்கள் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் தங்களுடைய பணியைச் செய்து வந்தனர். இவர்களுக்கும் மக்களுக்குமிடையே பல்வேறு தடைகள் இருந்தன. அவற்றுள் ஒன்று மொழித்தடையாகும். தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வாழ்ந்த கடற்கரை சார்ந்த மக்கள் பெரும்பாலும் கல்வி அறிவு பெறாத பாமர மக்களாக இருந்தனர். இவர்களிடம் நற்செய்தியை அறிவிப்பதற்காகப் பணியாற்றிய திருமறைப்பணியாளர்கள் தமிழ்மொழியை அறிந்திருக்கவில்லை. மொழி அறியாத அச்சூழலில் மக்களோடு தொடர்பு கொள்வது பெரும் சவாலாக இருந்தது. அக்காலகட்டத்தில், தமிழ் நாடகம் மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதற்கு அடிப்படைக் காரணம் தமிழ் மக்களின் ஆர்வமாகும். நாடகங்கள் மக்களுக்கு எழுச்சியூட்டக் கூடியனவாகவும் மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்துவனவாகவும் அமோக வரவேற்பைப் பெற்றனவாகவும் விளங்கின.

இக்காலத்தில் தமிழகத்தில் மேலோங்கியிருந்த பிற சமயத்தினர் நாடகக் கலையை எதிர்மறைக் கண்ணோட்டத்துடன் அணுகினர். அத்தகைய சூழலில் திருத்தொண்டர்கள் தமிழ் மக்களின் விருப்பக்கலையான நாடகக் கலையைத் தம் சமயத்தைப் பரப்புவதற்கான கருவியாகக் கொண்டனர். அவர்கள் கிறித்தவ சமயக் கருத்துகளை நாடகங்களாக்கி மக்களைக் காணச் செய்தனர். விவிலியச் கருத்துக்கள் கிறித்தவ நாடகங்களுக்கு மூலகதையாகக் கொள்ளப்பட்டன. இந்நிலையில் தமிழ்க் கிறித்தவ நாடக இலக்கியம் புத்தெழுச்சி பெற்றது. முத்தமிழும் விரவி வரும் தன்மை கொண்ட, நாடகக் கலையைக் கிறித்தவ சமயம் பரப்புவதற்கான கருவியாகக் கொண்டது. காலமாற்றத்தோடு நாடகங்கள் கிறித்தவச் சமய வளர்ச்சிக்கேற்பக் கருத்துகளைத் தாங்கி வளர்ந்தன.

**நாடகங்களில் கிறித்தவ விழுமியங்கள்**

விழுமியங்கள் என்பது மனிதர்களின் உயர்ந்த குணங்கள், கொள்கைகள்,உள்ளார்ந்த ஒழுக்க நெறிகள் ஆகும். இதனைக் கடைபிடிப்பவர்கள் உன்னத குணம் படைத்த

**Volume 4, Issue 1 June 2026** **E-ISSN: 2584-167X**

மனிதர்களாகக் கருதப்பட்டனர். கிறித்தவர்களின் நாயகனாகக் கருதப்படும் இயேசுவும் இப்பண்புகளைக் கடைபிடித்தார், பிறரும் கடைபிடிக்க வழிகாட்டினார். அவற்றைத் தூய ஆவியின் கனிகள் என்று விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை, **"அன்பு, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம், என்பனவை ஆகும்." (கலாத்தியர், 5: 22-23)** இக்கிறித்தவ நற்பண்புகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கத்தோடு விவிலிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் படைக்கப்பட்டன.

**இறையன்பு**

சமுதாயத்தில் நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோமோ அவ்வாறு நாமும் நடந்து கொள்ள வேண்டும்.

> **மற்றவர்களிடம் பறிவு காட்டுவதால், இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது. மனித சமுதாயமானது சிறப்பாகவும் ஏற்றத்தாழ்வுகள், பகை இல்லாமல் இருக்கவும் நாம் எல்லோருக்கும் எல்லாமாக வாழ வேண்டும் அனைவரையும் மன்னித்து ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை வேண்டும் அவ்வாறு இருக்கும் பொழுது நம்முடைய வாழ்வு இன்புற்று இருக்கும். (ஜெ. ஆனந்தி)**

தமிழ் இலக்கியத்தில் அன்பின் ஆழத்தை குறுந்தொகைப் பாடலில்,

> **நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று**
> **நீரினும் ஆர் அளவின்றே; சாரல்**
> **கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
> **பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. (குறுந்தொகை, பா.3)**

என்று நிலத்தைக் காட்டிலும் பெரியது, வானத்தைக் காட்டிலும் பரந்தது, கடலைக்காட்டிலும் பெரிய அளவுடையது, மலைச்சாரலிலே வலிமையான கிளைகளையுடைய குறிஞ்சியின் மலர்களிலிருந்து தேனைச் சேர்க்கின்ற மலைநாட்டினையுடைய தலைவனிடம் நான் கொண்டிருக்கும் அன்பு அத்தகையது எனக் காதலின் ஆழத்தை குறுந்தொகைப் பாடல்களில் அறிய முடிகிறது. **"விவிலியத்தில் இயேசுவின் அன்பின் தன்மையை நீ உன்மீது அன்பு கூறுவது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக." (மத்தேயு 22: 29)** இது இயேசுவின் அன்புக் கட்டளையாகும். இறைத்தந்தையின் அன்பை அளக்க முடியாது. அதற்கு ஆழம், அகலம், நீளம் என்ன? என்று அறியமுடியாது. அவர் சிலுவையில் இருந்தபோது தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகக் கடவுளிடம் மன்னிப்பு கேட்டார். **"தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக்கா 23: 84)** என்று விவிலியத்தில் இறையன்பை வெளிப்படுத்தியுள்ளதைப் போல ஊதாரிப்பிள்ளை விலாசத்திலும் காணமுடிகிறது. பங்கு பிரித்துச் சென்ற பெருஞ்செலவாழிப் பிள்ளை திரும்பித் தந்தையிடம் வெறுங்கையோடு வந்தான். தந்தையோ அவனை விருந்தோடு வரவேற்றார் என்பதை,

> **வாடாவென் கண்ணே மகனே மடியினில் என்மகனே**
> **நாடெங்குந்தேடி நலிந்து மெலிந்தேனே என் மகனே (ஊதாரிப்பிள்ளை விலாசம், ப. 221)**
> **அப்பனே எனதுபாலா அரும்பிழை பொறுத்துச் சீவன்**
> **தப்பியே வரவுங்கிருபை தந்த தேவர்க்குத் தோத்திரம் (மேலது, ப. 223)**

என்னும் வரிகளின் வழி கூறப்பட்டுள்ளது. மகன் சொத்தைப் பங்கிட்டு தூர தேசம் சென்றதிலிருந்து, தந்தைச் சொத்தைப் பெரிதாகக் கருதாமல் மகன் வரவுக்காகக் காத்திருந்தார். அவன் எவ்வளவுதான் தவறு செய்திருந்தாலும், அதைப் பெரிதாகக் கருதவில்லை. மாறாக, திரும்பி வந்துள்ளதை நினைத்து கடவுளுக்கு நன்றி கூறினார். மகன் மீது பாசத்தைப் பொழிந்தார். இவ்வாறு தந்தையின் அன்பை வெளிப்படுத்துவதிலிருந்து இறையன்பைச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

**மனிதநேயம் – தியாகம்**

இலக்கியங்கள் சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டுவனவாகும். சமூகத்திற்கு இன்றியமையாததாக விளங்கும் பல கூறுகளில் முதன்மைபெற்று விளங்குவது மனிதநேயம் ஆகும். இதனை தியாகம் என்றும் எடுத்துக் கொள்ளப்படலாம். இது மனிதனை, மனித நலத்தை மையமாகக் கொண்ட மனிதத் தன்மை வாய்ந்த நோக்கு என்பதாகும். இனம், மொழி, மதம், நாடு, நாகரிகம் என்ற எல்லைகளைக் கடந்து எல்லாரும் சமம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. சுருக்கமாக ஈரம் கசியும் ஒரு நுட்பமான உணர்வுதான் மனித நேயம் என்று கூறலாம்.

இறைமகன் இயேசு பெருமான் வழங்கிய போதனைகளில் மனிதநேயமிக்கது 'உன்னைப் போல் உன் அயலானையும் நேசி' என்னும் தொடராகும். தன்னலமற்ற அன்பே மனித நேயமாகும் என்பதை இயேசுவின் வழியில் உணர்ந்தவர் தமிழ்க் கிறித்தவ நாடக ஆசிரியர் பூதலூர் முத்து. இவருடைய 'மெழுகுவத்திகள்' என்னும் நாடகத்தில் மனிதநேயம் என்னும் உயர்ந்த பண்பு செம்மையுற படைக்கப்பட்டுள்ளது.

- **பிறரது வாழ்விற்கு ஒளியேற்றுதல்**
- **உதவி செய்யக் காத்திருத்தல்**
- **மன்னித்தல்**

ஆகிய செயல்களின் வழியாக மனிதநேயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**பிறரது வாழ்விற்கு ஒளியேற்றுதல்**

மெழுகுவத்திகள் என்னும் நாடகத்தில் ஜான்சன் புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் ஆய்வு மருத்துவர். இவர் சாவதற்குள் மனிதகுல மேம்பாட்டிற்காக ஏதாவது ஒரு நன்மையைச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையுடன் தொடர்ந்து முயன்று வந்தார். இவரது உயர்ந்த நோக்கத்தையும் மனிதநேய உணர்வையும் மேரி என்ற பெண் விரும்பினாள். இருவரும் நாளடைவில் காதலர்களாக மாறித் திருமணம் செய்ய முடிவெடுத்தனர். இவர்கள் காதலிப்பதைப் விரும்பாத ஜேம்ஸ் ஜான்சனின் ஆய்விற்கு இடையூறு செய்தான். அதனால் ரேடியேசன் ஜான்சனின் உடலில் பாதிப்பை ஏற்படுத்தியது. எனவே, தன் நண்பன் குமரனிடம்,

> **மேரியை நான் மணந்து கொண்டு வாழ்வதென்பது நடக்கக்கூடிய காரியமா? பாலைவனத்துக் கானல் நீர் தாகத்துக்குப் பயன்படுமா? அவள் வாழ வேண்டியவள். குடும்ப விளக்காகச் சுடர்விட வேண்டியவள். என்னுடைய ஒவ்வொரு இதயத்துடிப்பும் கல்லறையை நோக்கி அழைக்கும் முரசாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. என்னால் அவளது வாழ்வு ஏன் கெடவேண்டும்? நான் இனிமேல் எந்தக் கவலையுமில்லாமல் மேரியின் வாழ்க்கை என்னாகுமோ? என்ற தடுமாற்றம் இல்லாமல் சோதனையைச் செய்யலாம். சாவு வந்தால் சுகமாகத் தழுவிக் கொள்ளலாம். (மெழுகுவத்திகள், ப. 52)**

என்று கூறுவதிலிருந்து தான் விரும்புபவளை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்று எண்ணவில்லை. தன் உடல்நிலை மோசமான நிலைக்கு உட்பட்டுள்ளதால் தன் காதலி, தன்னைத் திருமணம் செய்து துன்பப்படுவதை விட, அவள் எங்கிருந்தாலும் யாரை மணந்துகொண்டாலும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த மனிதநேயப் பண்பு இந்நாடகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இந்நாடகத்தில் பல இடங்களில் ஜான்சன் என்ற நாடக மாந்தரின் வழி அமைதியுடன் இருப்பதற்கு அடிப்படையாக மனிதநேயம் திகழ்கிறது என்று இக்காலச் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**கிறித்தவமும் மன்னிப்பும்**

தவறோ, குற்றமோ செய்தவருடைய சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, அவரிடம் காட்டும் கைம்மாறு கருதாத அன்பினை மன்னிப்பு எனலாம்.

கடந்த கால கசப்புகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள, எல்லா மதங்களுமே மன்னிப்பு என்கின்ற வழியைக் காட்டுகின்றன. மன்னிப்பு நம் கடந்தகாலக் காயங்களைக் காணாமல்

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

போகச் செய்கிறது. சில வேளைகளில் மன்னிப்பதைக் கோழைத்தனமான செயல் என்றும் எண்ணப்படுகிறது. உண்மையில்,

> **மன்னிப்பு என்பது பலவீனமான காரியம் அல்ல. அது இயலாமையின் வெளிப்படுவதும் அல்ல. மாறாக, நாம் பலமுள்ளவர்கள் என்பதற்கான அடையாளம் அது. எனவே தான் மகாத்மாகாந்தி மனவலிமையுள்ளவர்கள் மன்னிப்பார்கள், கோழைகள் பழிவாங்குவார்கள். (உளவியல் ஆன்மீகம், ப.65)**

என்ற கூற்றிலிருந்து பிறருடைய குற்றங்களைக் கழுவிப் போக்கும் இரக்கக் குணம் உடையவர்களால்தான் மன்னிப்பு என்ற புனிதமான செயலைச் செய்ய முடியும் என்று அறிய முடிகிறது. இயேசுவின் போதனையும் வாழ்வும் இணைந்தே சென்றன. அவர், தான் போதித்ததை வாழ்வாக்கினார் என்பதை, **“மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்” (லூக் 6:37)** என்று கூறியதன் வழி அறியலாம். அவர் சிலுவையில் இருந்தபோது, **“தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னார்.” (லூக்.23:34)** என்பதை விவிலியத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இயேசு போதித்தவற்றை கிறித்தவர்களும் தங்கள் வாழ்வில் பின்பற்றுகின்றனர். அவர் கற்பித்தவற்றையே கிறித்தவ நாடக இலக்கியங்களும் மக்களுக்கு அறிவுறுத்துகின்றன. மேலும், இன்றைய மருத்துவத்துறையின் கருத்துப்படி,

> **நம் உடம்பில் உள்ள இரத்த அழுத்தம், குடல்புண், புற்றுநோய், கவனத்தை ஒருமுகப்படுத்த முடியாத தன்மை, மன அழுத்தம், மன விரக்தி போன்ற பல்வேறு நோய்களுக்கு முக்கியமான காரணமாக இருப்பது மன்னிப்பின் மூலம் வெளியே கொண்டு வரப்படாத மனக் காயங்களே ஆகும். (ஜெ. மரியஅந்தோணி, உளவியல் ஆன்மீகம், ப. 65)**

என்று மன்னிப்பின் மேன்மையை ஜெ.மரிய அந்தோணி குறிப்பிட்டுள்ளார். கிறித்தவ தமிழ் நாடகங்களில் மூன்று வகையான மன்னித்தல் குறித்து கூறப்பட்டுள்ளன. அவை,

- **மன்னித்தல்**
- **மன்னிப்புக் கேட்டல்**
- **மன்னிப்புப் பெறுதல்**

புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகத்தில் நல்லூர் குருசு அந்தோணிமுத்து அவர்கள் மன்னிப்பு கேட்பதையும், மன்னிப்பு அளிப்பதையும் பற்றித் தங்கள் நாடகத்தில் சிறப்பாக விளக்கியுள்ளார். மதுரராயர் மதுரேந்திர அரசனின் தம்பி சந்திரபாலன், அந்தியோக்கிய நாட்டரசன் சந்தியாகுவின் தம்பி திரைக்கோன் இருவரும் கனுகொந்தாள் மீது மையல் கொண்டனர். கனுகொந்தாள் இணங்காமையால் அவள் மீது வீண்பழி சுமத்தி அவளைக் காட்டிற்கனுப்புவதற்குக் காரணமாயினர். இறுதியில் இருவரின் தீயச்செயலால் அவர்களுக்குக் குட்டநோய் ஏற்பட்டது. மருத்துவரை நாடி, பணியாட்கள் அலைந்தபோது கனுகொந்தாளிடம் சஞ்சீவி மருந்து இருப்பதை அறிந்து அவளை அரண்மனைக்கு அழைத்து வந்தனர். அவளோ, மருந்து தருவதற்கு முன் குருவிடம் சென்று ஒப்புரவு அருட்சாதனம் பெற வேண்டினாள். இருவரும் சென்று ஒப்புரவு அருட்சாதனத்தில் தங்கள் பாவங்களைக் கூறினர். குரு அவர்களைத் தமையர்களிடம் சென்று பாவத்தைக் கூறி மன்னிப்புப் பெற்றுவரச் செய்தார்.

> **சந்திரபாலன் தன் அண்ணனிடம்,**
> **அண்ணாரே அரசர் மெச்சும் அதிவித மகுடவேந்தே**
> **கன்னியாங் கனிகொந்தெனு கற்புள்ள உமது தேவி**
> **தன்னை யென்மையலால் கொன்றேன் சதியது பொருத்தாலுந்தன்**
> **பொன்னடி பூண்டேனைய்யா புனிதஎம் தமையர் கோவே (புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகம், ப.121)**

என்று தான் செய்த குற்றத்தைக் கூறினான். அதுபோல திரைக்கோனும் தமையனிடம்,

**Volume 4, Issue 1 June 2026** **E-ISSN: 2584-167X**

**கனம்பெரு கனிகொந்தாள் கன்னிமேல் மையல்கொண்டு**
**சினமொடு யுனது பாலனை சிரம்தனை யறுத்தே பாவி**
**மனமது பொறுப்பீர் உந்தன் மலரடி சரணமைய்யா (மேலது, ப.113)**

என்று தன்னுடைய பாவத்தைக் கூறி மன்னிப்புப் பெற்றான். பின், கனுக்கொந்தாளிடம் சஞ்சீவி மருந்தை வாங்கி உடலெல்லாம் பூசிய பின் குட்ட நோய் நீங்கி நலம் பெற்றனர். இந்நாடகத்தில் சிறப்பாக மனிதனுக்கு நோய் ஏற்படக் காரணம் பாவம். நாம் செய்த தவற்றை ஒப்புக்கொண்டு மன்னிப்புப் பெறும்போது நோய் ஏற்படுவதற்கான வழி இல்லை. மன்னிப்பு மட்டுமே மனப்புண்ணிற்கு மருந்து என்பதை இந்நாடகத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஏழ்மை வாழ்வு**

இலக்குகள் தெளிவாக இருந்தால் தான் வாழ்வின் பாதை தெளிவாக அமையும். எதை நோக்கிப் பயணிக்கிறோம் என்ற தெளிவில்லாத சூழலில் பாதை எவ்வாறு தெளிவாகும்? இலக்கு இல்லாமல் வாழ்ந்தால் மண்ணும் மரமும் போலாவோம். எனவே தான் வள்ளுவர்,

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின் (குறள், 666)**

என்ற குறளின் வழி எண்ணியபடியே செயலாற்றுவதில் உறுதியாக இருந்தால் எண்ணியவற்றை எண்ணியவாறு அடைவோம் என்கிறார். இறைமகன் இயேசுவும் இலக்குத் தெளிவுள்ள ஒரு சிறந்த கொள்கையாளராகத் திகழ்ந்தார். எவ்வாறெனில் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதே அவரது கொள்கையாக இருந்தது. இயேசு காணாமல் போனபோது மரியாவும், யோசேப்பும் தேடினார்கள். அவர் எருசலேம் தேவாலயத்தில் அறிஞர்களோடு மறைநூலைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். மரியா, மகனே! நானும் உன் தந்தையும் மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே? என்றார். உடனே சிறுவன் இயேசு, **“நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்றார்” (லூக். 2: 49)** இவ்வாறு இளமை முதல், தன் கொள்கை என்ன? என்பதில் இயேசு தெளிவாயிருந்தார். அதை அவ்வாறே நிறைவேற்றினார் என்பதை அவர் சிலுவையில் தொங்கிய கடைசி நிமிடத்தில் எல்லாம் நிறைவேறிற்று என்று கூறித் தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார் (யோவான் 19:30) என்பதிலிருந்து வாழ்க்கை முழுவதும் அவர் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே கொள்கையாகக் கொண்டு செயல்பட்டார் என்பதை விவிலியத்தின் வழி அறிய முடிகிறது. ஒளிநிறை புனிதை கிளாரா நாடகம் முடங்கிக் கிடக்கும் பெண்குலத்தை விழிப்படையச் செய்யும் பொருட்டு படைக்கப்பட்டுள்ளது. இந்நாடகத்தின் தலைமை மாந்தரான கிளாரா உறுதியான கொள்கையுடைய பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளார். **“கனவு காணுங்கள் இளைஞர்களே, நீங்கள் உறங்கும் போது வருவது கனவல்ல. மாறாக, உங்களை உறங்க அனுமதிக்காததே கனவு என்கிறார் அப்துல் கலாம்.” (அருட்பணி ஜேம்ஸ், பழையது புதிதாக வளர்ச்சிக்கான வாழ்வியல் நெறிகள், ப.105)** என்ற கூற்றின்வழி அறியமுடிகிறது. இவர் காணச் சொல்லும் கனவு கொள்கைக் கனவு. அதே போலப் புனித கிளாராவின் வாழ்க்கையில் கிறித்துவைப் பின்பற்றி ஏழ்மையாக வாழ வேண்டும் என்ற கொள்கை அவளைத் தூங்க அனுமதிக்கவில்லை. பிரபுக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால், அவளின் கொள்கையை எட்டுவதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. அவள் கொள்கையில் தடம் மாறவில்லை. கிளாரா, **“ஏழ்மை வாழ்வை நான் பெரிதும் விரும்புகிறேன். மேலும் கிறிஸ்துவின் ஏழ்மையை நான் முழுமையாகப் பின்பற்ற முயலுகிறேன்.” (ஒளிநிறை புனிதை கிளாரா, ப.37)** என்று தெளிவோடு வாழ்வை நகர்த்தினாள். தெளிவான இலக்கும் விடாமுயற்சியும் கொண்டுள்ள ஒருவருக்குச் சாதனை என்பது ஒரு சிக்கல் அல்ல. கொள்கையாளர்களின் நெஞ்சம், நரம்பிழைகளால் அல்ல. நம்பிக்கை வலைகளால் பின்னப்பட்டிருக்க வேண்டும். கொள்கையில் உறுதியுள்ளவருக்கு ஒருபோதும் ஏமாற்றமே இல்லை. இதனை, கிளாரா தன் வாழ்வில் சாத்தியமாக்கினாள். தான் எண்ணியபடியே துறவற

**Volume 4, Issue 1 June 2026** **E-ISSN: 2584-167X**

மடத்தில் சேர்ந்து ஏழ்மை வாக்குறுதியை ஏற்று வாழத் தொடங்கினாள். அப்போது அவளது தந்தை அதனைத் தடுக்க, அவள் இருந்த மடத்திற்குச் சென்றுக் கோபத்தோடு அழைத்தார். **“நாங்களோ உனக்குத் திருமண ஏற்பாடு செய்கிறோம். நீயோ இங்கு வந்து, கன்னியர் மடத்தில் ஒளிந்துகொண்டு இருக்கிறாய். இம்மடத்தை விட்டு உடனடியாக வெளியே வந்துவிடு. இல்லையென்றால் நடப்பதே வேறு விதமாயிருக்கும்.” (மேலது, ப. 83)** என்று தந்தை கூறினாலும் அதை ஒரு பொருட்டாக ஏற்கவில்லை. துணிவோடு தன் வாழ்க்கையின் கொள்கை இதுதான் என்று கூறி மறுத்து விடுகிறாள். கிளாராவின் இலக்கு தெளிவாக இருந்ததால் அவளால் திடமுடன் பயணம் செய்ய முடிந்தது. எந்தவித நெருக்கடியிலும் அவளது இலக்கு கலைந்துவிடவில்லை. எனவே தான் அக்காலச்சூழலுக்கு இயலாத மிகவும் ஏழ்மை நிறைந்த அவளது வாழ்வைப் பார்த்த மறைஆயர் அவளது ஏழ்மையைக் கைவிட்டுவிடும்படிக் கேட்டுக்கொண்டார். அவள், **“பரிசுத்த பாப்புவே! ஏழைக் கிறித்துவை முழுமையாகப் பின்பற்றும் கடமையிலிருந்து விடுபட நான் ஒருபோதும் சம்மதியேன்.” (மேலது, ப. 132)** என்று துணிவோடு மறுத்து விட்டாள். வாழ்வு முழுவதும் கொள்கையோடு வாழ்ந்து இலக்கை அடைந்த கிளாரா பெண்குலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இவரைப்போன்று சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் கொள்கையோடு செயல்பட்டால் அடிமை என்பது அகன்றுவிடும். பெண் விடுதலை அடைய வேண்டும் என்றால், அதற்கு இலக்குத் தெளிவு வேண்டும் என்பதைத் தனித்தன்மையாகக் கொண்டு இந்நாடகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நிலையாமை**

நம் வாழ்வில் இளமை, செல்வம், யாக்கை அனைத்தும் நிலையற்றவை என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நிலையாமை பற்றிய உணர்வு நமது வாழ்வைப் பயனுள்ளதாக்கும். இவற்றை தொல்காப்பியரும் காஞ்சி என்னும் புறத்திணையில்,

**பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே (தொல். புறத்திணை, நூ. 23)**

என்று கூறுகிறார். நாம் வாழும் உலகம் இத்தன்மையானது. செல்வம், இளமை இத்தன்மையானவை என்று முன்னமே அறிந்து கொண்டால் பிரிவோ, மாறுதலோ நேரும்போது மனம் கலங்கி வருந்திச் சோர்வடைய நேராது. நிலையாமையைப்பற்றி உணர்தல், வாழ்க்கையைக் கண்டு அஞ்சி ஓடுவதற்கு அன்று; வாழ்க்கையின் தன்மையை உள்ளவாறு அறிந்து அஞ்சாமல் நின்று சோர்வற்று வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு ஆகும். இதனைப் பற்றி ‘ஸ்ரீ பகார்;த்த விலாசம்’ நாடகத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. அரச குடும்பத்தில் பிறந்த ஸ்ரீ பகார்த்தர் இயல்பாகவே செல்வம், இளமை, யாக்கை மூன்றையும் மிகுதியாகப் பெற்றிருந்தார். இவர் கல்வி, கேள்வி ஞானத்தைக் கற்றறிந்த நிலையினை,

**அருமைப் புதல்வன் றனக்கிளமை**
**ஆகும் பருவம் அதில் மணங்கண்**
**டிருகண் களிப்ப என்று முள்ள**
**எண்ணி இருப்பாள் இளவலினுள்**
**மருமம் உணரப் பெறாதிதனை**
**வகுப்பான் தலைவர் குரைப்பாளே (ஸ்ரீ பகார்த்தர் விலாசம், ப. 62)**

என்று கூறுகிறார். புத்தியிலும் பக்தியிலும் முதிர்ந்து மிக்க மாட்சி கொண்டு விளங்கியமையைக் கண்டு எல்லாரும் புகழ்ந்ததைக் கேட்ட அன்னை மிகுந்த மகிழ்ச்சி கொண்டாள். ஸ்ரீ பகார்த்தர் கல்வி, கேள்வி ஞானத்துடன் மிகுந்த அழகுடனும் நற்பண்புகளுடனும் காணப்பட்டார். பெற்றோர் குறிப்பிட்ட வயது வந்ததும் மகனுக்குத் திருமணம் செய்வித்தனர்.

**அருமையென் மைந்தா உன்னையடைந்திவன் அளப்பில் பேறும்**
**பெருமையும் பெற்றேன் நின்னாற் பிறங்கின குலமும் வாழ்வும்**

Academic Research News

*Peer-Reviewed Journal*

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X



**உரிமைமுற் றுனக்கீந் தேனிவ் அளப்பிலா செல்வம் ஏற்றுன்**
**கருமுகிற் குழலியோடுங் களிப்பினில் வாழ்க மன்னோ (மேலது, ப.85)**

என்று தந்தை தனது சொத்துகளை முழுவதும் அதிகாரம் செய்யும் உரிமையை மகனுக்கு அளித்தார். இருந்தபோதும் மகனது மனதிற்கு அதை ஏற்பது, பெரும் சுமையை ஏற்பது போலத் தோன்றியது. திருமணம் முடிந்த நாளன்று இரவில் தந்தை, தாய், மனைவி, செல்வம் நிரம்பிய அரண்மனை, சுகபோக வாழ்வு அனைத்தையும் துறந்து தனிமையாய் இருளைத் துணையாகக் கொண்டு ஸ்ரீ பகார்த்தர் வெளியே சென்றார். சொந்த நாட்டில் யாரும் அறியாவண்ணம், அயலவராய் இரந்து உண்டு, கோவில்கள் தோறும் சென்று கடவுளை வழிபட்டு வாழ்ந்தார். இதிலிருந்து, எல்லாச் செல்வங்களையும் நிரம்பப் பெற்ற ஸ்ரீ பகார்த்தர் நிலையாமையை உணர்ந்தார். அனைத்தையும் விடுத்து ஒன்றுமில்லாமையில் இறைவனோடு இணைந்து மகிழ்ந்து வந்தார். வள்ளுவர்,

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு (குறள், 247)**

என்ற குறள் வழியாக இவ்வுலக வாழ்விற்குப் பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அதுபோல மேலுலக வாழ்விற்காக அருள் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் குறிக்கிறார். பொருளைச் சேகரிப்பதில் வாழ்வைக் கழித்துவிடக் கூடாது. விவிலியத்திலும் இறைமகன் இயேசு, **"உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" (மத். 6: 21)** என்று கூறியுள்ளார். நாம் செல்வம், யாக்கை, இளமை போன்றவற்றை மட்டும் தேடாமல், அவை நிலையற்றது என்பதை உணர்ந்து அருள் வாழ்க்கையையும் தேட முனைய வேண்டுமென்பதை இந்நாடகம் எடுத்துரைக்கிறது.

**பிறர் வாழ்வு பெற தன்னையே தியாகம் செய்தல்**

உலகத்தில் உள்ள எல்லா உயிர்களையும் எண்ணிப் பாதுகாக்கிறவனே சிறந்த தலைவன் ஒரு தலைவனுடைய முதல் கடமை தன்னை நம்பியவர்களைப் பேணிப் பாதுகாத்தல்.

**தனது நாட்டில் வாழும் எல்லாயும் உயிர்களை தன் உயிர் போல எண்ணி பாதுகாப்பவனே சிறந்த தலைவன் நீதியான முறையில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் அவர்களை முன் நின்று வழி நடத்துபவனே சிறந்த தலைவன் (க.ஜான்சி ராணி, முனைவர் க. அமலா கார்த்திகா)**

இயேசு தமது பணிவாழ்வின் தொடக்கத்தில் ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் எளியவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை வாழ்வு பெறவும் என்னை அனுப்பியுள்ளார் எனக்கூறி தம் பணியைத் தொடங்கினார். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பாவிகள், தாழ்த்தப்பட்ட சாமானியர்கள், பழித்துரைக்கப்பட்ட தொழுநோயாளிகள், வெறுக்கப்பட்ட ஆயக்காரர்கள் போன்ற மக்களின் நல்வாழ்வுக்காக உரிமைக்குரல் எழுப்பினார். சட்டங்கள், மரபுநெறிகள், சடங்குகள், இவற்றைப் பின்னுக்குத் தள்ளினார். மனித நேயத்தை முன்னிலைப்படுத்தினார். மக்களிடையே நிலவிய அநீதிகளையும் முறைகேடுகளையும் வன்மையாகக் கண்டித்தார். எல்லா மக்களும் வாழ்வு பெற வேண்டும், அதுவும் நிறைவாகப் பெற வேண்டும் என்ற இயேசுவின் எழுச்சிமிக்க வார்த்தைகளே விடுதலை இறையியலுக்கு அடிப்படையாகும். ஒடுக்கப்பட்டோருக்காக உரிமைக்குரல் கொடுப்பதற்குப் பதுங்கி ஒதுங்கி நிற்காமல், வலியோரை வாழ்த்தி எளியோரை வாட்டும் அநீதியும் பொய்மையும் நிறைந்த சமுதாயத்தைக் கண்டு துடித்து, மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களுக்கு நற்செய்தியின் அடிப்படையில் அணுகித் தீர்வு காண்பது விடுதலை இறையியல் ஆகும்.

*குருதியில் பூத்த மலர்* நாடகத்தில் ஆசிரியர் வி. லீமாரோஸ் விடுதலை இறையியலை முன்னெடுத்துள்ளமை இந்நாடகத்தின் தனிச் சிறப்பாக அமைந்துள்ளது. பேராயர் ஆஸ்கார்

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

ரொமேரோ, சான் சால்வடோர் நகரத்தின் பேராயர். அந்நகரில் வாழும் பிரபுக்கள் மக்களைக் கொத்தடிமைகளாகத் தங்கள் தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்ய வைத்திருந்தனர். அதில் வரும் வருவாயில் பிரபுக்கள் பகட்டு வாழ்வு வாழ்ந்தனர். இதனை அருள்திரு. நவாரோ, அருள்திரு. நெட்டோ போன்றோர் எதிர்த்தனர். மக்களுக்காக உரிமைக்குரல் எழுப்பினர். பிரபுக்களின் இராணுவத்தினர் சூழ்ச்சிசெய்து இவர்களைக் கொன்றனர். இதை அறிந்த பேராயர் ரொமேரோ, பொய்க்கு எதிராக உண்மையைப் பேசவும் போதிக்கவும் கற்பிக்கவும் திருச்சபைக்குக் கடமை உண்டு என்று எழுச்சியுடன் பிரபுக்களின் அடக்குமுறையைக் கண்டித்தார். பேதுருவைப் போலத் துன்பங்களைக் கண்டு ஓடிப்போகாமல், ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல, ஒரு மனிதர் வழியாக வாழ்வு ஏற்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை வாழ்வு பெற என் உயிர் தான் விலையென்றால் அதையும் நான் கொடுக்கத் தயாராகி விட்டேன் என்று ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காகத் துணிந்து நின்றார்.

மக்கள் அமைதியுடன் வாழவேண்டும் என்பதற்காகத் திருச்சபையினர் பிரபுக்களுக்குச் சாதகமாக இருந்தனர். ஆனால் இரு அருட்தந்தையர்கள் உரிமைக்குரல் கொடுத்ததனால் சுட்டு வீழ்த்தப்பட்டதைக் கண்டு தூண்டப்பட்டு பேராயர் ரொமேரோ, **“ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் உழைக்கவே இறைவன் எனக்கு இந்த உயிரைக் கொடுத்திருக்கிறார். எப்போதும் அவருக்கு விருப்பமோ அப்போது அதை எடுத்துக் கொள்வார்.” (குருதியில் பூத்த மலர், ப. 95)** என்று துணிவுடன் பிரபுக்களையும் அரசு அதிகாரிகளையும் எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது. அடக்குமுறைகளுக்கு எதிராக இறைவார்த்தையின் ஒளியில் தீர்வு காண்பது விடுதலை இறையியல் என்பதை உணர்ந்த ஆயர், **“ஏழைகளுக்கு எதிராக அட்டூழியம் செய்யும் இந்தப் பிரபுக்கள், நிச்சயம் இறைவனால் நியாயம் கேட்கப்படுவார்கள். உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி கடவுள் பக்கம் திரும்புங்கள்.” (மேலது, ப. 94)** என்று பாலைவனத்தில் குரலெழுப்பிய திருமுழுக்கு யோவானைப் போலக் கடைசி மூச்சு உள்ளவரை ஏழைகளின் சார்பாக நின்று குரல் கொடுக்கிறார். இவ்வாறு அவர் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் விடுதலைக்காக நற்செய்தியின் அடிப்படையில் உரிமைக்குரல் கொடுத்தார். அதற்காக இராணுவத்தினர் அவரைச் சுட்டனர். அதையும் ஏற்று, **“அழிப்பதிலும் இரத்தம் சிந்துவதிலும் உங்களுக்குள்ள வெறித்தனமான ஆர்வத்தை விட்டொழியுங்கள்.” (மேலது, ப. 95)** என்று தம் உயிரை விடுத்தார். இவற்றின்வழி எங்கே இறைவார்த்தையின் அடிப்படையில் உரிமைக்குரல் எழுப்பப்படுகிறதோ அங்கே விடுதலை இறையியல் செயலாற்றுகிறது. இதனை ஆயர் ரோமேரோவின் வாழ்க்கைச் சான்றின் வழியாக உணரமுடிகிறது.

**தொகுப்புரை**

நாடகங்கள் என்பது நாட்டின் அகத்தே நடைபெறும் செய்திகளை மட்டும் உள்ளடக்கியதன்று. அவை எல்லா மக்களுக்கும் நன்மை தரக்கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும். அவ்வகையில் தமிழ் நாடகங்களில் கிறித்தவ விழுமியங்களைத் தாங்கிய நாடகங்களும் படைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றுவோர் சமுதாயத்தில் உயர்ந்த மனிதர்களாகக் கருதப்படுவர். இவர்கள் வாழ்வு சமுதாயத்திற்கு நற்பண்புகளை விதைத்துச் செல்வதாக அமைந்திருக்கும். இதனையே இயேசு போதித்தார், வாழ்ந்தும் காட்டினார். அவற்றையே இன்றும் விவிலியம் நமக்கு எடுத்துரைக்கிறது என்பதை கிறித்தவ நாடகங்கள் மையக்கருவாகக் கொண்டு படைக்கப்பட்டு மக்களுக்கு நற்பண்புகளைக் போதித்து வருகின்றன.

**குறிப்புகள்**

[1] ஆணந்தி. ஜெ.ப. வேதாகமம் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள். *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 2, இதழ் 2, 2, May-2019, E-ISSN: 2581-7140

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 4, Issue 1 June 2026** **E-ISSN: 2584-167X**

[2] இளம்பூரணர் உரை. *தொல்காப்பியம்.* வ. சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, மறுபதிப்பு, 1982.

[3] ஜான்சி ராணி, க., மற்றும் க. அமலா கார்த்திகா. "சங்க காலத் தமிழரின் வாழ்வியல் விழுமியக் கூறுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 7, இதழ் 1, 2024, ISSN: 2581-7140.

[4] ஜேம்ஸ். *பழையது புதிதாக வளர்ச்சிக்காக வாழ்வியல் நெறிகள்.* வைகறை பதிப்பகம், திண்டுக்கல், முதற்பதிப்பு, ஏப்ரல் 2019.

[5] திருவிவிலியம். *பொதுமொழிபெயர்ப்பு.* தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையம், திண்டிவனம், 1995.

[6] பரிமேலழகர். *திருக்குறள் பரிமேலழகர் உரை.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2017.

[7] பூதலூர் முத்து. *மெழுகுவத்திகள்.* அன்னை தெரசா பதிப்பகம், சாரம், புதுச்சேரி, முதற்பதிப்பு, டிசம்பர் 2001.

[8] மணிவளன், சி. (ப.ஆ.). *ஊதாரிப்பிள்ளை விலாசம்.* கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, டிசம்பர் 1993.

[9] மணிவளன், சி. (ப.ஆ.). *ஸ்ரீ பகார்த்த விலாசம்.* கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, டிசம்பர் 2012.

[10] மரிய அந்தோணி, ஜெ. *உளவியல் ஆன்மீகம்.* நம்வாழ்வு வெளியீடு, மயிலாப்பூர், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2009.

[11] மரிய மிக்கேல், ஏ. *ஒளிநிறை புனிதை கிளாரா வரலாற்று நாடகம்.* கவின் அச்சகம், மதுரை.

[12] சோசப் பெஸ்கி, ஏ. (ப.ஆ.). *நல்லூர் குருசு அந்தோணிமுத்து இயற்றிய புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகம்.* கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, டிசம்பர் 2012.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.